வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 03.10.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 276 பக்கங்கள் : 08

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பிள்ளையானுக்கு நேரடி தொடர்பு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

● தாக்குதலை முன்னரே அறிந்திருந்தார்

கொழும்பு, ஒக்ரோபர் 03

**“உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் பிள்ளையான் முன் கூட்டியே அறிந்திருந்தார். இதில் அவர் நேரடியாக ஈடுபட்ட தகவல்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன”, - இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.**

“தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளபடி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து முறையான விசாரணை இன்னமும் நடைபெற்று வருகிறது. அத்துடன், விசாரணைகளில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

“தாக்குதல் தொடர்பான ஆரம்ப விசாரணைகளின் குறைபாடுகள், அலட்சியம் குறித்தும் தற்போது முறையான விசாரணை நடைபெறுகிறது. பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்குதலில் நேரடியாக ஈடுபட்ட தகவல்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன”, என்று தென்னிலங்கை தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். (ஐ)



# மனித புதைகுழி அகழ்வுக்கான நிதி விடயத்தில் சிக்கல் இல்லை!

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

கொழும்பு, ஒக். 03

வடக்கு, கிழக்கு பகுதிகளில் மனித புதைகுழிகள் காணப்படும் இடங்களாக சந்தேகிக்கப்படும் பகுதிகளில் அகழ்வு பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான நிதி, தமது அமைச்சிடம் இருப்பதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மனித புதைகுழிகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

மேலும், குருக்கள்மடம் மனிதப் புதைகுழிக்கான நிதி முழுமையாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறி னார். அத்துடன், யாழ்ப்பாணம்,

07

# மது பாவனையால் தினசரி 50 பேர் பலி!

கொழும்பு, ஒக். 03

மது பாவனையால் தினமும் சுமார் 50 இலங்கையர்கள் மரணமடைகின்றனர் - என்று மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 2026ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் மதுசாரத்துக்கான வரியை சரியான முறையில் அதிகரித்து எதிர்கால சந்ததியினர் மது பாவனைக்கு ஆளாகும் சதவீதத்தை குறைக்கவும் மது பாவனையால் ஏற்படுகின்ற சுகாதார, பொருளாதார பிரச்னைகளைக் குறைக்கவும் விரைவான அரச திட்டம் அவசியம்.

07

# சட்டவிரோதமாக சொத்துகளை சேர்த்தோரின் விவரம் எம்மிடம்

## இளங்குமரன் எம். பி. தெரிவிப்பு

- த.காண்டீபன் -

வடமராட்சி,ஒக்.03

வடமராட்சி கிழக்கில் சட்டவிரோதமாக சொத்துகளை சேர்த்தவர்கள் மற்றும் அவர்களுக்கு உதவிய பொலிஸாரின் விவரங்கள் எம்மிடம் உள்ளன. அந்த விவரங்களை பாதுகாப்பு அமைச்சுக்கு தெரியப்படுத்தி அவர்கள்மீது விரைவாக நடவடிக்கை எடுப்போம் என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

07

# திங்கட்கிழமை முதல் போராட்டம் தீவிரமாகும்!

## மின்சார சபை தொழிற்சங்கங்கள்

கொழும்பு, ஒக். 03

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பில் 24 கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்துக்கு அரச தரப்பிடமிருந்து எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. முறையான தீர்வு கிடைக்காதவிடத்து திங்கட்கிழமை முதல் போராட்டத்தை மேலும் தீவிரப் படுத்துவோம் என்று மின்சார சபை

07

# விஜயராம இல்லத்தை மகிந்த இன்னமும் ஒப்படைக்கவில்லை

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 03

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கொழும்பு விஜயராம மாவத்தையில் வசித்த அரச இல்லத்தை இன்னமும் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கவில்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி விஜயராம இல்லத்தை விட்டு வெளியேறி மூன்று வாரங்கள் கடந்துவிட்டன. எனினும், வீட்டை அதிகாரபூர்வமாக பொது நிர்வாக அமைச்சிடம் ஒப்படைக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சிறப்பு சலுகைகளை இரத்து செய்யும் சட்ட

07

# மதிப்பீட்டை செய்யாமல் வீட்டை வழங்க முடியாது

## மகிந்த தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 03

“விஜயராம இல்லத்தின் சொத்துகள் மற்றும் உபகரணங்களை மதிப்பீடு செய்யாமல் வீட்டை ஒப்படைக்க முடியாது”, என்று மகிந்த தரப்பு தெரிவித்துள்ளது.

மதிப்பீட்டு பணிகளை மேற்கொள்ளாமல் வீட்டை ஒப்படைத்தால் “மகிந்த ராஜபக்ச, அரச சொத்துகளை லொறியில் ஏற்றிச் சென்றுவிட்டார்” என்று குற்றஞ்சாட்டுவரென மகிந்தவின் ஊடக பேச்சாளர் மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

விஜயராம இல்லத்தை மகிந்த ராஜபக்ஷ இன்னமும் ஒப்படைக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் விதமாகவே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# மகிந்தவின் பாதுகாப்பு அதிகாரி கைது

கொழும்பு, செப். 03

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமை பாதுகாப்பு அதிகாரியான மேஜர் நெவில் வன்னியாராச்சி கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் அளிக்க இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் நேற்று முற்பட்ட நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத சொத்து சேர்ப்பு தொடர்பான விசாரணைகளில் முன்னிலையாகுமாறு கடந்த வருடம் டிசெம்பர் மாதம் அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அவர், விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்த நிலையிலேயே நேற்றையதினம் கைது

07

# தாஜூதீன் மரணம் தொடர்பில் நாமல் அஞ்ச வேண்டியதில்லை

## பிரதி அமைச்சர் மகிந்த

கொழும்பு, ஒக். 03

வசீம் தாஜூதீனின் மரணம் தொடர்பான புதிய விசாரணைகள் குறித்து சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பதற்றமடைய தேவையில்லை”, என்று பிரதி அமைச்சர் மகிந்த ஜெயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு குற்றம், மோசடி மற்றும் ஊழல் குறித்தும் அரசாங்கம் முறையான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும்.

எனவே, நாமல் ராஜபக்ஷ அல்லது வேறு

07

# வடக்கு, கிழக்கில் இன்றுமுதல் மிதமான மழை கிடைக்கும்!

யாழ்ப்பாணம், ஒக். 03

இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல பகுதிகளில் மிதமான மழை கிடைக்கும் என்று யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இட்டுள்ள பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

வெப்ப சலன செயல்பாட்டால் உருவாகும் இந்த மழை இடி, மின்னலுடன் இணைந்த மழையாக இருக்கும். இந்தக் காலப்பகுதியில்

07

# யாழ்தேவி நேர அட்டவணை மாற்றம்!

யாழ்ப்பாணம்,ஒக்.03

யாழ்தேவி அதிவேக ரயிலின் நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அத்தியாவசிய பராமரிப்பு பணிகளுக்காக நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இந்த நேர அட்டவணை நடைமுறையில் இருக்கும் என்று புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்தேவி ரயில் காலை 6.40 மணிக்கு புறப்படும். முற்பகல் 11.35 மணிக்கு வவுனியாவை அடையும். 2 மணித்தியாலம் 40 நிமிடங்கள் அங்கு தரித்து, பின்னர்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசியை விற்கவேண்டாம்!

## யாழ். வணிகர் கழகம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 03

கீரிச்சம்பா, சம்பா போன்ற அரிசி வகைகளை அரச கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலையில் விற்பனை செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வர்த்தகர்களை யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

கடந்த மாதம் 30ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கும் யாழ். வணிகர் கழக பிரதிநிதிகளுக்கும் இடையே கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, கீரிச்சம்பா, சம்பா போன்ற அரிசி வகைகளுக்கு இருக்கும் தட்டுப்பாடு காரணமாக அரசாங்கம் நிர்ணயித்த விலையைவிட, கூடிய விலையில் அரிசி ஆலைகளிடமிருந்து அரிசியை கொள்வனவு செய்து அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் வர்த்தகர்கள் இருப்பதை அமைச்சருக்கு தெளிவாகக் கூறியிருந்தோம்.


இதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர் இந்தப் பிரச்னையை உடனடியாக சுமுக நிலைக்குக் கொண்டு வருவதற்காகவும் நுகர்வோரின் தேவையை உடனடியாக பூர்த்தி செய்வதற்காகவும் அடுத்து வரும் இரு வாரங்களில் கீரிச்சம்பா, சம்பா போன்ற அரிசி வகைகளை இறக்குமதி செய்ய அரசு தீர்மானித்திருப்பதால் வர்த்தகர்கள் கூடிய விலையில் அரிசியை கொள்வனவு செய்து அரச கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலையில் விற்பனை செய்வதை தவிர்த்துக் கொள்வதுடன் இதனால், ஏற்படும் சட்டச் சிக்கல்களிலிருந்து வர்த்தகர்கள் தங்களை பாதுகாக்குமாறு அமைச்சர் அறிவுறுத்தினார். இதற்கமைய வர்த்தகர்கள் செயல்பட வேண்டும் - என்றுள்ளது.

'தருமமுழக்கம்' பெருந்துடுப்பாட்டம்:

# வெற்றிக்கிண்ணம் வென்றது தருமபுரம் மத்திய கல்லூரி!

கிளிநொச்சி, ஒக். 03

தருமமுழக்கம் பெருந்துடுப்பாட்ட போட்டியில் 23 ஓட்டங்களால் முழங்காவில் மகா வித்தியாலய அணியை வெற்றி கொண்டு, கிண்ணத்தைத் தனதாக்கியது தருமபுரம் மத்திய கல்லூரி.



கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயம், தருமபுரம் மத்திய கல்லூரி இடையிலான தர்மமுழக்கம் பெருந்துடுப்பாட்ட போட்டி கடந்த 26, 27ஆம் திகதிகளில் நடைபெற்றது.

முழங்காவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் தருமபுரம் மத்திய கல்லூரி துடுப்பெடுத்தாடியது. அந்த அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய முழங்காவில் மகா வித்தியாலயம் சகல விக்கெட்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது.


49 ஓட்டங்களால் முன்னிலை வகித்த தருமபுரம் மத்திய கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய 64 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

113 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய முழங்காவில் மகா வித்தியாலயம் 90 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதனால், 23 ஓட்டங்களால் தருமபுரம் மத்திய கல்லூரி போட்டியை வெற்றி கொண்டது.

முழங்காவில் மகா வித்தியாலயத்தின் அதிபர் சிவானந்தி பரதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி ம.மோகனதாஸ், சிறப்பு விருந்தினர்களாக உடற்கல்வி ஆசிரியர்களான ப. சசிகுமார், ஞா. யோகீசன், கௌரவ விருந்தினராக முழங்காவில் மகா வித்தியாலயத்தின் முன்னாள் உதவி அதிபரும் மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளருமான எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# சந்திரசேகர பிள்ளையார் ஆலய மானம்பூ திருவிழா





யாழ்ப்பாணம், ஒக். 03

பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு சிறீ சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் மானம்பூ உற்சவம் நேற்று காலை மிகவும் பக்தி பூர்வமாக இடம் பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வசந்த மண்டபபூசை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து விநாயகர் பெருமான் குதிரை வாகனத்தில் வெளிவீதி எழுந்தருளி மானம்பூ உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த மானம்பூ திருவிழாவில் அடியவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# ஆற்றுகை, காண்பிய கலைகள் பீடாதிபதியாக ரொபேர்ட் தெரிவு!



யாழ்ப்பாணம், ஒக். 03

சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றுகை மற்றும் காண்பிய கலைகள் பீடத்தின் பீடாதிபதியாக இசைத் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான த. ரொபேர்ட் அருட்சேகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் பீடாதிபதி எஸ். சிவரூபனின் பதவிக்காலம் நிறைவுக்கு வருவதைத் தொடர்ந்து, புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்கான பீடத்தின் சபைக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இடம்பெற்ற தேர்தலில் தற்போதைய இசைத் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான த. ரொபேர்ட் அருட்சேகரம் பீடாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். இதனடிப்படையில், அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு த. ரொபேர்ட் அருட்சேகரம் பீடாதிபதியாகச் செயல்படுவார். (ஐ)

# யாழ்ப்பாணத்தில் காந்தியின் ஜனன விழா கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 03

இந்தியாவின் தேசபிதா காந்தியின் 156 ஆவது ஜனன தின நிகழ்வு இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்தும் அவரின் திருவுருவப் பட்டத்துக்கு மலர் தூபியும் அஞ்சலி செய்யப்பட்டது. அத்துடன், சாந்தீயம் வருடாந்த பத்திரிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது, யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணை தூதுவர் சாய் முரளி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன், யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் மற்றும் மாநகர சபை பிரதி முதல்வர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 03


தேசிய கலை இலக்கிய பேரவையின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழா இன்று முதல் ஞாயிற்றுக்கிழமை வரை கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.


இதில், இரண்டாம் நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. "ஈழத்து நூல்களை அறிவோம்" என்ற தொனிப் பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் க. இ. குமாரசாமி நினைவு அரங்கில் ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் த. தர்மராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நூல்களின் அறிமுக உரைகளை ஹாயத்திரி சண்முகநாதனின் "சொற்களால் நிலம் கடந்தவர்கள்" நூல் பற்றி யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சத்தியப்பிரியா கஜேந்திரன், வடகோவை வரதராஜனின் "ஆளப்போகும் வேர்கள்" நூல் தொடர்பாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டி. சி. அரவிந்தராஜ், கலாநிதி ந.இர வீந்திரனின் "தமிழ் பண்பாடு ஊற்றுக்களும் ஓட்டங்களும்" நூல் தொடர்பாக எழுத்தாளர் கந்தர்மடம் அஜந்தன், ரஜிதா அரிச்சந்திரனின் "நந்திக்கடலே" கவிதைத் தொகுப்பு பற்றி ஆசிரியர் ஆரணி முகுந்தன் ஆகியோர் ஆற்றவுள்ளவுள்ளனர்.

விசேட கலை நிகழ்வுகளாக சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் பு. கணேசராசாவின் நெறியாள்கையில் "வீட்டுக்காரன்" மற்றும் "பசு" ஆகிய நாடகங்களும் நடைபெறவுள்ளன.

மேலும், இந்த நிகழ்வின் விசேட அம்சமாக மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.





நல்லூர் கந்தசுவாமி கோவில் நவராத்திரி கும்பபூசை இறுதி நாளான நேற்று மானம்பூ திருவிழா நடைபெற்றபோது...! படங்கள்: ஐ.சிவசாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
03.10.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எழுதிக் கொடுப்பதை வாசித்தல்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் ஒன்றை எழுதியிருக்கின்றனர். ஏற்கனவே, பலர் கடிதங்கள் அனுப்பியுள்ள நிலையில் மேலுமொரு கடிதம். அதில், வடக்கு - கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பரிந்துரைக்க வேண்டும் என்னும் கோரிக்கை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறான சொற்களை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தாங்களாகப் பயன்படுத்துவதற்கு வாய்பில்லை. ஏனெனில், தாங்கள் என்ன கூறுகிறோம் என்பதன் தாற்பரியத்தை அவர்கள் அறியாதவர்கள்.

யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்கள் கடந்துவிட்டன. இந்தப் பதினாறு வருடங்களில் இவ்வாறான கோரிக்கைகள் பலரால் - பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இவற்றால் விளைந்த நன்மை என்ன என்று கேட்டால் எதுவுமில்லை. ஆனாலும், அம்புலிமாமா கதையில் வரும் விக்கிரமாதித்தன் வேதாளத்தை கீழே இறக்குவதற்காக கதைகள் சொல்லுவது போன்றுதான் கடந்த பதினாறு வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை நோக்கியும் - சர்வதேச நாடுகளை நோக்கியும் நமது சூழலில் கதைகள் கூறப்பட்டன. ஆனால், எவற்றாலும் அடிப்படைகளை மாற்றியமைக்க முடியவில்லை. இந்த நிலையில், அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காகக் கதைகள் கூறும் நிலையிலேயே தமிழ் அரசியல் சூழல் காணப்படுகிறது.

இதில், மிகவும் அப்பாவிகளாகத் தொடர்ந்தும் இருப்பவர்கள் யார் என்றால் இவ்வாறான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் அமைப்புகள், அரசியல் கைதிகளுக்கான அமைப்புகள் போன்றவைதான். அரசியல்வாதிகள் விளங்காமல் எதனையும் கூறவில்லை. தாங்கள் கூறுவது பொய் என்று தெரிந்தே அவர்கள் கூறுகின்றனர். அடுத்தது, அரசுசாரா நிறுவன நிதியில் இயங்கும் சிவில் சமூகக் குழுக்கள் என்பவை விடயங்களின் சாத்தியமின்மையை அறிந்தும் அறியாதவர்கள்போல் பேசிவருகின்றன. அவ்வாறு பேசுவதால் அவர்களுக்கு இலாபம் உண்டு. அடுத்தது, புலம்பெயர் குழுக்கள் தங்களின் விருப்பங்களுக்கு ஏற்றவாறு வடக்கு - கிழக்கில் சிலர் பேச வேண்டும் என்று எண்ணுகின்றன. அவர்கள் எழுதிக் கொடுப்பவைகளை, அது பற்றிய ஆகக்குறைந்த அறிவோ - புரிதலோ இல்லாமல் வாசிக்கப்படுகிறது.

ஆனால், என்ன நடக்கிறது - தாங்கள் எந்த நிலையில் இருக்கிறோம், தங்களுடைய எதிர்காலம் எவ்வாறு பலரால் பந்தாடப்படுகிறது என்னும் புரிதல் இல்லாமல் சிலர் எழுதிக் கொடுப்பதை வாசிப்பதாக அவர்களின் வாழ்வு கழிகிறது. அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கொடிகளுடன் வீதிகளில் தாங்கள் காட்சிப் பொருளாக்கப்படுகிறோம் என்பதை உணர முடியாத அப்பாவி மக்கள் - இரவல் சுலோகங்களை நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், யதார்த்தமோ அவர்களுடைய நம்பிக்கைக்கு அதிக தொலைவில் இருக்கிறது.

# "யாழ்ப்பாணத்தில் ஆழமான வேர்களைக் கொண்ட சமாதானத்துக்கான மதங்களின் பயணம்"

கலாநிதி
ஜெகான் பெரேரா



"தேசிய ஒற்றுமையை நோக்கி எம்மை வழி நடத்தும் சமய விழுமியங்கள்" என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் யாழ்ப்பாண மாவட்ட சர்வமத பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சர்வமத மகாநாட்டுக்கு வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருக்கும் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா சமாதானத்துக்கான மதங்களின் பயணம் யாழ்ப்பாணத்தில் ஆழமான வேர்களைக் கொண்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் அந்த செய்தியில் கூறியிருப்பதாவது:-

யாழ்ப்பாணத்தில் சமாதானத்துக்கான மதங்களின் பயணம் ஆழமான வேர்களைக் கொண்டது. போர் முடிவுக்கு வருவதற்கு நீண்டகாலம் முன்னதாகவே பல்வேறு மதங்களையும் சேர்ந்த துணிச்சல் மிகு ஆண்களும் பெண்களும் பிளவுக்கு மேலாக பேச்சுவார்த்தையை விரும்பினார்கள். அந்த இலட்சியத்தில் சமாதானத்துக்கான மதங்களின் உலக மகாநாடு, சேவா லங்கா பவுண்டேசன், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கத்துக்கான நிலையம் மற்றும் தேசிய சமாதானப் பேரவை போன்ற அமைப்புகள் ஒன்றிணைந்து நின்றன. போர் இருளுக்குள் ஒரு ஒளியாக விளக்கிய அவர்களின் பணிகள் சிதறுப்பட்டுப்போன சமூகங்கள் என்றாவது ஒருநாள் இணக்கத்துடன் வாழும் என்ற நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் உயர்த்துடிப்புடன் வைத்திருந்தன.

இந்த முயற்சிகளின் மையமாக தங்களது சமூகத்தில் தார்மீக அதிகாரத்தைக் கொண்டவர்களாக விளங்கும் மதத் தலைவர்கள் இருந்தார்கள். அவர்கள் மத்தியில் தற்போது மதங்களுக்கு இடையிலான குழுவின் யாழ்ப்பாண மாவட்ட தலைவரான கிருபானந்த குருக்கள் உறுதியான தலைமைத்துவத்தை வழங்கினார். சமாதானச் சுடரை வன்முறைகள் அணைத்துவிடும் அச்சுறுத்தல் நிலவியபோது அவர் மற்றையவர்களுடன் சேர்ந்து அதை தொடர்ந்து ஒளிரவைத்துக் கொண்டிருந்தார். பயங்கரமான போர் வருடங்களிலும் அதைத் தொடர்ந்துவந்த நம்பிக்கைகள் நிறைவேறாத வருடங்களிலும் அவர்களது முன்மாதிரியான செயற்பாடுகள் சமாதானத்துக்கான பாதை பலவீனமான ஒன்று அல்ல, வலிமையையும் தார்மீகத் துணிச்சலையும் கொண்டதே என்று எமக்கு போதிக்கின்றன.


தேசிய சமாதானப் பேரவை 2010 ஆம் ஆண்டு முதல் மதங்களுக்கு இடையிலான மாவட்டக் குழுக்களை ஆதரிக்கத் தொடங்கியது. இலங்கை பூராவும் இந்த அமைப்புக்கள் பேச்சுவார்த்தைகள் இடம்பெறக்கூடிய, மக்களின் மனக்குறைகளை கேட்டு அறிகின்ற, இன, மத எல்லைகளுக்கு அப்பால் சமூகங்கள் ஒன்றுசேர்ந்து பணியாற்றக்கூடிய நம்பிக்கைக்குரிய இடங்களாக வளர்ந்திருக்கின்றன. நம்பிக்கை, சகல தரப்புகளையும் அரவணைக்கும் மனப்பான்மை, நேர்மை மற்றும் மனித கௌரவத்துக்கான மதிப்பு ஆகிய விழுமியங்களை இந்த அமைப்புக்கள் உருவகித்து நிற்கின்றன. நல்லிணக்கம் என்பது போரை முடிவுக்கு கொணடுவருவதை பற்றியது மாத்திரமல்ல, ஒவ்வொரு குடிமகனும் தாங்களை சமத்துவமாக மதிக்கப்படுவதாக உணருகின்ற ஒரு உறவுமுறையை உருவாக்குவதை பற்றியதும் கூட என்பதை இந்த அமைப்புகள் காண்பித்திருக்கின்றன.

இன்றும் கூட போரின் வடுக்கள் குணப்படுத்தப்படாமல் தொடருகின்றன. காணாமல்போன தங்களது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதற்கு குடும்பங்கள் பதிலுக்காக காத்திருக்கின்றன. செம் மணி போன்ற பாரிய மனிதப்புதை குழிகள் கவனிக்கப்படாத வேதனைகளை எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. நில உரிமைகள் தொடர்பிலான சர்ச்சைகள் தொடருகின்றன. மாகாண சுய ஆட்சிமுறை பற்றிய உறுதிமொழி நிறைவேற்றப் படாமல் இருக்கிறது. அவ்வாறு இருந்தாலும், சவால்களுக்கு மத்தியில் மதங்களுக்கு இடையிலான மாவட்டக் குழுக்களும் அவற்றின் தலைவர்களும் நம்பிக்கையின் சின்னமாக விளங்குகிறார்கள். ஒன்றிணைந்து நிற்பதன் மூலம் அவர்கள் பயமின்றி உண்மையைப் பேச முடியும் என்பதையும் வேற்றுமைகளை இல்லாமல் செய்யமுடியும் என்பதையும் பல்வகைமையில் இருந்து ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும் என்பதையும் எமக்கு அவர்கள் காண்பிக்கிறார்கள்.

அவர்களில் சிலரின் பெயர்களை குறிப்பிட வேண்டியது அவசியமாகும். மதத் தலைவர்கள் மத்தியில் மகாலிங்க சிவக்குருக்கள், வாசுதேவக் குருக்கள், வண. சிறிவிமல தேரர், அசீஸ் மௌலவி, றஹீம் மௌலவி, வணபிதா ஜெயக்குமார், வணபிதா டிக்சன் மற்றும் வணபிதா வின்சென்ற் பட்ரிக் ஆகியோர் தொடர்ச்சியாக தங்களது பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மதத்தலைவர்கள் அல்லாத சாதாரண மக்கள் மத்தியில் ஜயந்த செனவிரத்ன, ஹர்ஷ குமார நவரத்ன, சிரோமி ஸ்ரீபன் மற்றும் எஸ். செந்துராஜா ஆகியோர் மதங்களுக்கு இடையிலான பணிகளுக்கு வளமூட்டியிருக்கிறார்களன. பல்வேறு வழிகளில் அவர்கள் எல்லோரும் இன்று நிலவுகின்ற மேம்பட்ட சூழ்நிலை உருலாகுவதற்கு பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். ஆனால், அந்த பணிகளை மேற்கொண்டு முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒரு நட்புறவுக்கொடையான யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் நாம் கூடும்போது எல்லைகளுக்கு அப்பாலும் சமூகங்களுக்கு அப்பாலும் ஒருமைப்பாட்டினால் ஊட்டிவளர்க்கப்படுவதே சமாதானம் என்பது எமக்கு நினைவு படுத்தப்படுகிறது. தேசிய சமாதானப் பேரவை எங்களது பங்காளியுடன் (SOND) ஒன்றிணைந்து மதத்தலைவர்களுடனும் யாழ்ப்பாண மக்களுடனும் தொடர்ந்து பணியாற்றுவதற்கு உறுதிபூணுகிறது. நீதி நிலைநாட்டப்படும் தினத்தை, நல்லிணக்கம் நிறைவு செய்யப்படும் தினத்தை, நாங்கள் எல்லோரும் இந்த மண்ணுக்குச் சொந்தமான சமத்துவமான பிள்ளைகள் என்று இலங்கையின் ஒவ்வொரு சமூகத்தவரும் நம்பிக்கையுடன் சொல்லக்கூடிய தினத்தை காண்பதற்கு ஆவலுடன் இருக்கிறோம்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 03 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 17
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : ஏகாதசி




**மேடம்**
எதையும் தாங்கும் மனோபலம் கிடைக்கும். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மதிப்புக் கூடும்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். சக ஊழியர்களுடன் இருந்த மோதல்கள் விலகும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் பழையபாக்கிகள் வசூலாகும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். நன்மைகள் உண்டாகும்.

**சிம்மம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**கன்னி**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்**
பழைய நினைவுகளின் இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மறதியால் பிரச்னைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். மேலதிகாரிகளுடன் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். வியாபாரம் தலைக்கும். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

# “கைதடி அஞ்சலகத்தை தரமுயர்த்த வேண்டும்”

யாழ்ப்பாணம், ஒக். 03

கைதடி அஞ்சலகம் நிரந்தர கட்டடம் இல்லாமல் தொடர்ந்து வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜ், தனியார் ஒருவரிடமிருந்து அஞ்சல் திணைக்களத்துக்கு பெற்றுக்கொடுத்த காணியில் நிரந்தர கட்டடம் அமைக்க நிதியும் பெற்றுக் கொடுக்கப் பட்டபோதும் தற்போதுவரை கட்டடம் அமைக்கப்படாமல் உள்ளதாகக் கூறப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் அச்சுவேலி மற்றும் கைதடி ஆகிய அஞ்சலகங்களுக்கு நிரந்தர கட்டடம் இல்லாமல் உள்ளது. இந்த இரண்டு அஞ்சலகங்களும் விரைவாக நிரந்தரக் கட்டடத்தில் பணியை ஆரம்பிக்க வேண்டும்.

அந்த வகையில் இரண்டுக்கும் காணிகள் உள்ளதால் அஞ்சல் திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்து விரைவாக வேலைகளை ஆரம்பித்து நிறைவு செய்ய வேண்டும்.

கைதடி தபாலகத்துக்கு என தனியார் ஒருவரால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் விரைவாக நிரந்தர அஞ்சலக கட்டடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் முன்னர் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி என்னவானது என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் பசுந்தேசம் அமைப்பு அஞ்சல்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

(எ)

# ரிஷாத் பதியுதீனின் அடிப்படை உரிமை மனு விசாரணைக்கு!

கொழும்பு, ஒக். 03

தாம் எந்தவித அடிப்படையும் இன்றி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமைக்கு எதிராக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் நேற்று திகதி நிர்ணயித்துள்ளது.

2021 ஆம் ஆண்டு எவ்வித காரணங்களும் இன்றி கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டமைக்கு எதிராக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

நீதியரசர்களான ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்றத்தின் மூவரடங்கிய ஆயம் முன்னிலையில் இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

(அ)

# குறிகாட்டுவான் இறங்குதுறை அபிவிருத்தி தொடர்பில் விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 03

குறிகாட்டுவான் இறங்குதுறையை பெருந் திட்டத்துக்கு அமைய அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

குறிகட்டுவான் இறங்குதுறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக, போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர், அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் துறைசார் அதிகாரிகள் சகிதம் 09. 08. 2025 அன்று குறிகட்டுவான் இறங்குதுறைக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு, ஆலோசனைகளையும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் உரிய அறிவுறுத்தல்களை அதிகாரிகளுக்கு வழங்கியதற்கமைய, அதன் தொடர் நடவடிக்கையாக பங்குதாரர்களுடனான கலந்துரையாடலாக இது அமைந்திருந்து.

இந்தக் கலந்துரையாடலில் வேலணை பிரதேச சபையின் தவிசாளர், மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் குரூஸ், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர், போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர், வேலணை பிரதேச செயலாளர், பிரதேச சபையின் செயலாளர், கடற்படை அதிகாரி மற்றும் துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

(எ)

# வவுனியா வடக்கு பிரதேச சபை தொடர்பில் சில தீர்மானங்கள்

## சத்தியலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஒக். 03

வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாகத்தை முரண்பாடுகளின்றி கொண்டு செல்வது தொடர்பில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு பிரதேச சபை தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

வவுனியா வடக்கு பிரதேச சபையை நிர்வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து கலந்துரையாடியிருந்தோம்.

கடந்த நான்கு மாதங்களாக சபையை நடத்திய போது எதிர்நோக்கிய பிரச்னைகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்பட்டன. இதில் பல விடயங்கள் கட்சிகளாலும் உறுப்பினர்களாலும் முன்வைக்கப்பட்டன. அதனை ஆராய்ந்து இப் பிரதேச சபையை மக்களுக்கு பயனுள்ள வகையில் எவ்வாறு கொண்டு செல்லலாம் என கலந்துரையாடினோம்.

குறிப்பாக வவுனியா வடக்கு பிரதேச சபை என்பது எமது மக்களின் இனப்பரம்பலை மாற்றுகின்ற செயல்பாடுகளை எதிர்கொண்டுள்ளது. நாங்கள் தமிழ் மக்களுடைய நன்மை கருதி இதனை சிறப்பாக கொண்டு நடத்துவது தொடர்பில் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

தவிசாளருக்கு எதிராக ஆளும் கட்சி உறுப்பினர்களே வெளிநடப்பு செய்தமை தொடர்பிலும் பேசப்பட்டது. சுமுகமான நிலை தான் தொடர்ந்து இருக்கிறது. கருத்து வேறுபாடுகள் வருவது இயற்கை. அவ்வாறு எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு நிர்வாகத்தை எவ்வாறு சிறப்பாக கொண்டு நடத்துவது என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

(எ-10)

# முன்பள்ளி சிறார்களின் சிறுவர் தின கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.03

சர்வதேச சிறுவர் தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்ட நிலையில் யாழ். வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு சென்மேரிஸ் முன்பள்ளியிலும் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது.

சென்மேரிஸ் முன்பள்ளி சிறார்கள், சிறுவர் பூங்காவுக்கு அழைத்து செல்லப்பட்டு அங்கு கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன் சிறுவர்கள் விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றி மகிழ்ந்தனர்.

நிகழ்வின் இறுதியில் ஆசிரியர்களால் சிறுவர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிஜிற்றல் பொருளாதாரத்தை அதிகரிப்பதே அரசின் இலக்கு!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஒக். 03

**2030 ஆம் ஆண்டளவில் இலங்கையின் டிஜிற்றல் பொருளாதாரத்தை அமெரிக்க டொலர் 15 பில்லியனாகவும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 வீதமாக அதிகரிப்பதும் அரசாங்கத்தின் நோக்கமாகும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**



இலங்கையில் முதன்முறையாக நடைபெற்ற ஏ.ஐ. தொழில்நுட்பம் பற்றிய தேசிய ஏ.ஐ எக்ஸ்போ 2025 மாநாடு மற்றும் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமர், செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு தொழில்நுட்பம் மட்டுமல்ல, அது இன்று நாம் எடுக்கும் தீர்மானங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு காரணியாக மாறி இருப்பதாக குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டிஜிற்றல் பொருளாதார மாதம் எனப் பெயரிடப்பட்டுள்ள செப்ரெம்பர் மாதத்தின் மிக முக்கியமான விடயம் மக்களிடையே டிஜிற்றல் மயமாக்கல் குறித்த ஆர்வத்தை ஏற்படுத்துவதாகும்.

டிஜிற்றல் கருவிகள் எமது அன்றாட வாழ்க்கையில் வேலைகளை எளிதாக்கவும், உலகப் பொருளாதாரத்துடன் இணைவதற்கும் நடைமுறைச் சாத்தியமான வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றது.

நாடு தழுவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்படும் கண்காட்சிகள் மற்றும் பயிற்சித் திட்டங்களை ஒன்றிணைப்பதன் மூலம் நாம் டிஜிற்றல் திறன், வர்த்தக புத்தாக்கம், மற்றும் அரசாங்கத்தின் ஈ-சேவைகளைப் பயன்படுத்துவதைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையை டிஜிற்றல் மயமாக்க வேண்டுமாயின், நம் நாட்டின் கல்வி மூலம் புதிய தொழில்நுட்பங்களைக் கற்பதற்கான வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்து, அதன் மூலம் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தக்கூடிய மனித வளத்தை உருவாக்க வேண்டும்.

அதற்காகவே இலங்கையின் கல்வி உள்கட்டமைப்பை நவீன மயமாக்குதல் மற்றும் பாரிய கல்விச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள நாம் ஆரம்பித்திருக்கின்றோம்.

செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ், காலநிலை விஞ்ஞானம் போன்ற புதிய பாடங்களை அறிமுகப்படுத்துதல், அதற்காக 100,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல், மற்றும் ஸ்மார்ட் வகுப்பறைகளுக்குத் தேவையான வளங்களை வழங்குதல் ஆகியவற்றுக்கான பணிகளை நாம் இப்போது மேற்கொண்டு வருகிறோம்.

நாட்டின் அனைத்துப் பிள்ளைகளுக்கும், அனைத்துக் குடிமக்களுக்கும் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துவதன் நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகின்றோம்.

ஏற்கனவே அரச சேவைகளில் காணப்படுகின்ற சிக்கலான தன்மையைக் குறைப்பதற்கும், சேவை வழங்குதலை விரைவுப்படுத்துவதற்கும் அரசாங்கத்தின் ஈ-சேவைகளைப் பயன்படுத்தக் கூடிய தளங்களை நாம் அமைத்து, செயல்படுத்தி வருகிறோம்-என்றார். (அ)

# எச்சரிக்கை விடுத்துள்ள இலஞ்ச ஊழல் ஆணைக்குழு!

கொழும்பு, ஒக். 03

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவை குறிவைத்து தவறான தகவல்களைப் பரப்புவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில்-

அண்மைக்காலமாக இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்தும் ஆணைக்குழுவை குறிவைத்து, சில தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆதாரமற்ற மற்றும் தவறான தகவல்களை வெளியிட்டு வருவது தெரியவந்துள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் நம்பகத்தன்மையை இழிவுபடுத்தும் வகையில் தவறான அறிக்கைகள் வெளியிடும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் மீது, ஊழல் தடுப்புச் சட்டம் மற்றும் பிற தொடர்புடைய சட்டங்களின் கீழ் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்-என்றுள்ளது. (அ)

# ரணில் செய்த அனைத்தையும் அநுரகுமார தொடருகின்றார்!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 03

மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கச் சென்றதைத் தவிர ரணில் செய்த அனைத்தையும் அநுர தொடர்ந்து கொண்டிருக்கின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்துக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் பொது மக்களால் முன்னெடுக்கப்பட்டது. இந்த திட்டத்தினால் சுற்றுச்சூழலுக்கும், பறவைகளுக்கும் பாரிய பாதிப்புக்கள் ஏற்படும் என சூழலியலாளர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால் அரசாங்கம் மக்களின் போராட்டங்களுக்கோ, சூழலியலாளர்களின் கருத்துக்களுக்கோ முக்கியத்துவமளிக்காமல் அவற்றை உதாசீனப்படுத்துகிறது. இவற்றுக்கு பதிலளிப்பதற்கு ஆளுந்தரப்பில் எவரும் முன்னுரிமையளிக்கவுமில்லை.

குறைந்த பட்சம் இதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் கூட இதற்கு பதிலளிக்கவில்லை.

இவ்வாறான பிரச்னைகள் ஏற்படும் போது சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசித்து பிரச்னைக்கு தீர்வு காண வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால் அரசாங்கத்திடமிருந்து இதுவரை இந்த கேள்விகளுக்கு பதில் எதுவும் கிடைக்கவில்லை.

மாறாக கலகம் அடக்கும் பிரிவினரை அனுப்பி அவர்களை தாக்குவதே அரசாங்கத்தின் பதிலாகவுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கச் சென்றதைத் தவிர ரணில் செய்த அனைத்தையும் அநுர தொடர்ந்து கொண்டிருக்கின்றார்.

எதிர்க்கட்சிகள் மாத்திரமின்றி தமது உரிமைகளுக்காக போராடும் மக்கள் மீதும் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது.

இவ்வாறான வழிமுறைகளை கைவிட்டு மக்களுடன் சுமூகமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து

பிரச்னைகளுக்கு தீர்வு காணுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்-என்றார். (அ)

# அநுர பிரியதர்ஷனவுக்கு எதிராக திருத்தப்பட்ட குற்றப் பத்திரிகை

கொழும்பு, ஒக். 03

2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் வெள்ள நிவாரணம் வழங்குவதாகக் கூறி பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 6.1 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவழித்து அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் பெற்றோலிய அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் அவரது மனைவி உட்பட ஆறு பிரதிவாதிகளுக்கு எதிராக நேற்று முன் தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகைகள் கையளிக்கப்பட்டன.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகைகள் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உதேஷ் ரணதுங்க முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டன. திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகையின் கீழ் இந்த வழக்கின் மற்றொரு பிரதிவாதியான முன்னாள் அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராகப் பணியாற்றியதாகக் கூறப்படும் அனுர செனவிரட்னவும் பெயரிடப்படுவார் என்றும் முறைப்பாட்டு தரப்பு நீதிமன்றத்திற்குத் தெரிவித்தது.

குறித்த பிரதிவாதி தொடர்பான குற்றப்பத்திரிகையை வழங்குவதற்காக வழக்கை ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (அ)

# நவம்பர் 1 முதல் பொலித்தீன் பை இலவச விநியோகத்துக்கு தடை!

கொழும்பு, ஒக். 03

எதிர்வரும் நவம்பர் 1 முதல் நுகர்வோருக்கு பிளாஸ்ரிக், பொலித்தீன் பைகளை இலவசமாக விநியோகிப்பதை நிறுத்தி வைக்கும் அசாதாரண வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானியை நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன் வெளியிட்டுள்ளார்.

வர்த்தமானியின்படி,

வியாபாரி எவரும் பாவனையாளர்களுக்கு பொருட்களை விற்பனை செய்யும்போது, அடர்த்தி குறைந்த பாலிஎதிலின், அடர்த்தி குறைந்த நேர்த்தியான பாலிஎதிலின் போன்ற மூலப் பொருட்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொதிகளை இலவசமாக வழங்க முடியாது.

அத்தகைய பொதிகளுக்கு அறவிடப்படும் விலை பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்கூறிய பொதிகளின் விலை வியாபார நிலையத்தில் தெளிவாக விளங்கக்கூடிய வகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# வரலாற்றில் முதன்முறையாக இலங்கையில் வதிவிட விஸா!

கொழும்பு, ஒக். 03

புதிய திருத்தப்பட்ட குடிவரவு மற்றும் குடியகல்வு ஒழுங்கு விதிகளின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட தனிநபர் முதலீட்டாளர் பிரிவின் கீழ் இலங்கை தனது வரலாற்றில் முதல் வதிவிட விஸாவை ஜேர்மனின் பிரஜையான கலாநிதி ப்ரே ட்ரெக்ஸ் செல் என்பவருக்கு வழங்கியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால உத்தியோகபூர்வமாக இந்த விஸாவை கையளித்துள்ளார்.

வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், வெளிநாட்டவர்கள் முதலீடு செய்வதன் மூலம் இலங்கையில் நீண்டகால வதிவிட விசாவைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் 5 வருட வதிவிட விஸா பெறுவதற்கு அமெரிக்க டொலர் 100,000 (அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயம்) முதலீடு செய்யவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 10 வருட வதிவிட விஸா பெறுவதற்கு அமெரிக்க டொலர் 200,000 (அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயம்) முதலீடு செய்யவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் தமது முதலீட்டுத் தொகையை வைப்புச் செய்வதற்காக, அங்கீகாரம் பெற்ற இலங்கையின் வங்கியில் விஸா நிகழ்ச்சித் திட்டம் வெளிநாட்டு நாணயக் கணக்கு ஒன்றைத் திறப்பது கட்டாயமாகும்.

இந்த புதிய விஸா திட்டம், முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் வாழ்வதற்கும், தங்கள் நிதியை முதலீடு செய்வதற்கும் ஒரு நேரடியான மற்றும் இலகுவான பாதையை வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நன்னடத்தை மையங்களில் காணப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி!

கொழும்பு, ஒக். 03

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, நன்னடத்தை மையங்களில் வைக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் நெரிகா தர்ஷனி பெரேரா தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, நன்னடத்தை மையங்களில் வைக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது எனவும் தற்போது சுமார் 9,000 குழந்தைகள் நன்னடத்தை மையங்களில் உள்ளனர் எனவும் அவர் கூறினார்.

அத்துடன் நன்னடத்தை மையங்களில் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து கேட்கப்பட்ட போது,

தேசியத் திணைக்களமாக, எங்களுக்கு முறைப்பாடு கிடைத்தால், அதை விசாரிக்கும் திறன் உள்ளது எனவும் பதிலளித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஓ.எம்.பி. ஒரு கண்துடைப்பு நாடகம் சர்வதேச விசாரணை வேண்டும்”




திருக்கோவில், ஒக். 03

ஓ. எம். பி. ஒரு கண்துடைப்பு நாடகம், சர்வதேச நீதி விசாரணையை நாங்கள் கோருகின்றோம் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச சபைக்குட்பட்ட தம்பிலுவில் மத்திய சந்தை முன்பாக கடந்த 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நீதிக்கான சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை ஐந்தாவது நாளில் நிறைவடைந்தது. இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இறுதிநாள் போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், திருக்கோவில், நாவிதன்வெளி, காரைதீவு, ஆலையடி வேம்பு பிரதேச சபைகளின் தவிசாளர்கள் கலந்து கொண்டனர். மேலும், திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி செபஸ்தியான் தேவி, மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி அமலராஜ் அமலநாயகி, அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி ஆகியோர் ஐ.நாவுக்கான மகஜரை பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மற்றும் தவிசாளர்களிடம் வழங்கினர்.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க ஆலோசகரும் மனித உரிமை செயல்பாட்டாளருமான தாமோதரம் பிரதீபன், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட உறவுகளும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் உள்நாட்டு பொறி முறையை நிராகரிக்கின்றோம். தமிழின அழிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் எனும் தொனிப்பொருளுடன் போராட்டம் நடைபெற்றது. (எ-01)



# 30 பதிலீட்டு ஊழியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு

மட்டக்களப்பு, ஒக். 03

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தீர்மானத்துக்கமைய மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையால் பதிலீட்டு ஊழியர்கள் 30 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் மேகசுந்தரம் வினோராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதி தவிசாளர் அ. வசிகரன், பிரதேச சபை பதவி நிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது தூய்மையானதும் அழகானதுமான மண்முனை தென் எருவில் பற்றினை உருவாக்கவுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் மேகசுந்தரம் வினோராஜ் தெரிவித்தார். (எ)

# அபிவிருத்தி பணி ஆரம்பம்

கல்முனை, ஒக். 03

தீகவாபி பிரதேச விவசாயிகளின் நீண்டநாள் தேவையான 4 வான்கதவுகள் கொண்ட துரிசு, அணைக்கட்டுகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த வெள்ளப் பெருக்கினால் பெரிதும் பாதிக்கப்பட்ட தீகவாபி பிரதேச விவசாயிகளுக்காக 12 மில்லியன் ரூபாய் நிதியில் இந்த அணைக்கட்டுகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்த அபிவிருத்திக்கான ஆரம்ப நிகழ்வை பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா ஆரம்பித்து வைத்தார்.

இதன்மூலமாக தீகவாபி, அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் பிரதேச விவசாயிகள் பெரிதும் நன்மையடைவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# காந்தி ஜெயந்திதினம்

மட்டக்களப்பு, ஒக். 03

மட்டக்களப்பு காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியடிகளின் 156 ஆவது ஜெயந்திதினம் நேற்று மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அந்தச் சங்கத்தின் தலைவர் கலாநிதி அ. செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் அதிகார பூர்வ ஏடான காந்தீயம் இதழினை மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானும் இதழாசிரியருமான எம். ஷாநதன் சத்தியகீர்த்தி வெளியிட்டு வைக்க முதல் பிரதியை மாநகர முதல்வர் பெற்றுக்கொண்டார். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாநகர சுகாதார தொழிலாளர்களின் பிள்ளைகள் இந்த நிகழ்வில் சிறப்பு பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (எ)

# குழந்தை மீட்பு பெற்றோருக்கு விளக்கமறியல்

அக்கரைப்பற்று, ஒக். 03

ஒலுவில் பகுதியில் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட பெண் குழந்தையின் தாய், தந்தை இருவரையும் இன்று 03ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் குழந்தையை பிரசவித்து, அதனை அநாதரவாக கைவிட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நிந்தவூரை சேர்ந்த தாய் மற்றும் ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த தந்தை ஆகியோரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-01)

# சாய்ந்தமருது நூலகத்தில் சிறுவர் தின நிகழ்வுகள்


சாய்ந்தமருது, ஒக். 03

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பொது நூலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை நூலகர் எம். முஸ்தாக் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் சாய்ந்தமருது அல்ஹிதாயா சிறுவர் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறுவர் புத்தகக் கண்காட்சி, நூலக ஊழியர்களின் கதை சொல்லும் அமர்வு என்பன நடைபெற்றதுடன் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் எல். மொஹமட் சிறுவர்களுக்கான கதைகளை சுவாரஸ்யமாக சொல்லி மகிழ்ச்சியூட்டினார்.

இங்கு சிறுவர்களின் திறமைகளும் வெளிப்படுத்தப்பட்டன. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து சிறுவர்களுக்கும் அன்பளிப்பு மற்றும் இனிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டன.



# “எங்கள் நீதிபதிகளுக்கான விடைகொடுப்பு”

கல்முனை, ஒக். 01

“எங்கள் நீதிபதிகளுக்கான விடைகொடுப்பு” என்ற நிகழ்ச்சி கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. ட்ரொஸ்கி, சிவில் மேல்முறையீட்டு உயர் நீதிமன்ற நீதிபதி வி. ராமகமலன், மேல் நீதிமன்ற நீதிபதி எம். நியாழ் மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம். சம்சுதீன் ஆகியோருக்கு பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றது. (எ-06)

# ஒலிபெருக்கிகளை பயன்படுத்தி வியாபாரம் செய்வதற்குத் தடை

சம்மாந்துறை, ஒக். 03

அம்பாறை, சம்மாந்துறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதான வீதிகளில் கை ஒலிபெருக்கிகளை பயன்படுத்தி வியாபாரம் மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொதுமக்களிடமிருந்து தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இத்தகைய செயற்பாடுகள் மதஸ்தலங்களில் நடைபெறும் வணக்க வழிபாடுகள் மற்றும் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துவதுடன் பொதுமக்கள் அசௌகரியமடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் சம்மாந்துறை பிரதேச சபை மற்றும் சம்மாந்துறை பொலிஸ் நிலையம் என்பன இணைந்து ஒலிபெருக்கிகளை பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

கடந்த மாதம் 04 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 11 ஒலி பெருக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பிரதேச சபை தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்பதோடு அனைத்து வியாபாரிகளும் சம்மாந்துறை பிரதேச சபையின் விதிமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விஜயராம....

மூலம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட நிலையில், மகிந்த ராஜபக்ச கடந்த மாதம் 11ஆம் திகதி விஜயராம இல்லத்தை விட்டு வெளியேறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை அரசு பொறுப்பேற்று ஒரு வருடம் கடந்து விட்டது. ஆனால், இந்த வீடுகள் தொடர்பில் உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை. இதனால், அவை பாழடைந்து வருகின்றன என்று கூறப்படுகிறது.

எனினும், இந்த வீடுகள் தொடர்பில் விரைவில் முடிவெடுக்கப்படும் என்று அரச தரப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

### மது பாவனை...

நாட்டில், நிகழும் மரணங்களில் 83 சதவீதமானவை தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன. மது பாவனையால் தினமும் சுமார் 50 பேர் மரணமடைகின்றனர். மேலும், ஒவ்வோர் ஆண்டும் சுமார் 20 ஆயிரம் இலங்கையர்கள் மரணமடைகிறார்கள். இருதய நோய், புற்றுநோய் போன்றவற்றுக்கு மதுசார பாவனையும் முக்கிய காரணியாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

### தாஜுதீன்...

யாரும் பதற்றமடையத் தேவையில்லை.

தாஜுதீனின் மரணம் குறித்து கடுமையான சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. அவரின் மரணத்துக்குப் பின்னால் ராஜபக்ஷ குடும்பத்தினர் இருக்கின்றனர் என்று பல ஆண்டுகளாக பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த விடயம் தொடர்பில், தற்போது விசாரணைகள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன - என்றார். (ஐ)

### சட்டவிரோத....

நேற்றைய தினம் வடமராட்சி கிழக்கில் சட்ட விரோதமாக மணல் அகழப்படும் பகுதிகளுக்கு சென்ற அவர் நிலைமைகளை பார்வையிட்டார். இதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடு கையில்,

வடமராட்சி கிழக்கில் சிலர் தொடர்ந்தும் சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு பிரதான காரணமாக இருப்பவர்கள் பொலிஸார். போதைப்பொருள், மணல் கடத்தல் காரர்களிடம் இலஞ்சத்தை பெற்றுக் கொண்டு இவ்வாறான செயல்பாடுகளை அனுமதிக்கிறார்கள். அவர்கள் தமது கடமையை உரிய முறையில் செய்திருந்தால் வடமராட்சி கிழக்கில் சட்ட விரோத செயல்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும்.

கடத்தல்கள் மூலமாக சிலர் அதிகளவான சொத்துகளை சட்டவிரோதமாக குவித்துள்ளனர். அவர்களுடன் சில பொலிஸாரும் அதிக சொத்துகளை வைத்துள்ளனர். வடமராட்சி கிழக்கில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் சட்டவிரோத தொழில்களில் ஈடுபடுபவர்கள், அவர்களின் விவரங்கள் - அவர்களுக்கு உதவும் பொலிஸாரின் விவரங்களை நாம் பெற்றுள்ளோம். இவற்றை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கவுள்ளோம்.

இது தொடர்பில், பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களை விசாரணைக்கு அழைக்கும். அப்போது, அவர்கள் தமது சொத்துகளை எவ்வாறு சேர்த்தார்கள் என்பது தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும். முனையை அரசாங்கங்கள் போன்று இந்த அரசாங்கத்திலும் கடத்தல் சம்பவங்களை செய்துவிட்டு அல்லது அவ்வாறானவர்களுக்கு பொலிஸார் உதவி விட்டு தப்பிவிடலாம் என்று நினைக்க வேண்டாம். இன்னும் மூன்று வருடங்களுக்குள் சகலரையும் கைது செய்து சட்டவிரோத செயல்பாடுகளை முற்றாக ஒழிப்போம் - என்றார். (ஐ)

# சர்ச்சைகளை மறைக்கவே வசீம் தாஜுதீன் விவகாரம்

## ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஒக். 03

அரசாங்கம் தொடர்பில் அண்மையில் எழுந்த சர்ச்சைகளை மறைப்பதற்காக வசீம் தாஜுதீன் விவகாரம் பிரசாரம் செய்யப்படுகிறது. இதை விடுத்து நியாயமான விசாரணைகளை முன்னெடுத்து தாஜுதீன் மரணத்துக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

தாஜுதீன் கொலை தொடர்பில் விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்படுவது சிறந்ததாகும். ஆனால், தற்போது இடம்பெறுவது விசாரணைகள் அல்ல, பிரசாரமாகும். அரசாங்கம் தொடர்பில் அண்மையில் எழுந்த சர்ச்சைகளை மறைப்பதற்காக இந்த விவகாரம் பிரசாரம் செய்யப்படுகிறது. இவற்றை விடுத்து நியாயமான விசாரணைகளை முன்னெடுத்து தாஜுதீனுடைய மரணத்துக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

ஆனால், அதனைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் தேட முயற்சித்தால் அது தவறானதாகும். மறுபுறம் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளும் இன்னும் முழுமையாக நிறைவுக்கு கொண்டு வரப்படவில்லை. எந்தவொரு வேலைத் திட்டத்தையும் அரசாங்கத்தால் திறம்பட முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. குறைந்தபட்சம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்தவற்றை கூட இவர்களால் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை.

இந்த ஓராண்டுக்குள் அரசாங்கத்தின் இயலாமையை மக்கள் நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர். இன்னும் ஓராண்டு செல்லும் போது இவர்களது உண்மையான முகத்தை மக்களால் மிகத் தெளிவாக உணர முடியும். கடந்த பிரதேச சபைத் தேர்தலில் எமது பலத்தை அதிகரித்து காண்பித்துள்ளோம். மாகாண சபைகள் தேர்தலில் அதனை மேலும் அதிகரித்துக் காண்பிப்போம். பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் அடுத்து ஆட்சியமைப்பதற்கான வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வோம் - என்றார். (ஐ)

# யாழ். பல்கலையின் பொன்னகவைப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஒக். 02

ஈழத் தமிழர்களின் தனிப்பெரும் அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்து, பொன்னகவைப் பெருவிழா காண்கிறது.

இலங்கை பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக 1974 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 06 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்ட இவ் உயர்கல்வி நிலையம், இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக வியாபித்து நிற்கிறது.

ஐம்பதாவது ஆண்டைக் கடந்திருக்கும் இப்பல்கலைக்கழகத்தின் பன்னிரண்டு பீடங்களும் இணைந்து பொன் விழா நிகழ்வை எதிர்வரும் ஒக்ரோபர் 06 ஆம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் பொன் அகவையை ஒட்டி, இராமநாதன் மண்டபத்தையொட்டி விரிவாக்கம் செய்யப்பட்ட “கூடல் அவை” எனும் சபா மண்டபம் சம்பிரதாயபூர்வமாக சமய அனுட்டானங்களுடன் அன்றைய தினம் காலை 6.30 மணியளவில் - சுப நேரத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

தொடர்ந்து காலை 09.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள பொன் விழா நிகழ்வுக்கு இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்ன பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவிருக்கிறார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே. எல். வசந்த குமாரவும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் ஐம்பது வருட கால கல்விப் பணி வரலாற்றை எடுத்தியம்பும் வகையில் அமைந்த வரலாற்றுப் பொக்கிஷமான “யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்அகவை வரலாறு” எனும் நூலும், பல்கலைக்கழகத்தின் பொன்னகவையை நினைவு கூரும் வகையிலான நினைவு முத்திரை வெளியீடும் இடம்பெறவுள்ளது. (அ)

### மகிந்தவின்....

செய்யப்பட்டிருந்தார்.

கைதான அவர் நேற்றைய தினமே கொழும்பு மேல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். (ஐ)

### வடக்கு...

பரவலாக அனைத்துப் பிரதேசங்களும் மழையைப் பெறும். ஆனால், ஒரே நாளில் அனைத்து பிரதேசங்களும் மழையைப் பெறாது என்பது குறிப்பிடத்தக்கது. சில இடங்களில் கனமழை கிடைக்கக்கூடும்.

காலபோக நெற் செய்கையில் புழுதி விதைப்பை மேற்கொண்டவர்களுக்கும் மேற்கொள்ள இருப்பவர்களுக்கும் இந்த மழை பயனுள்ளதாக அமையும்.

மேலும், இந்த வருடத்துக்கான வடகீழ் பருவக்காற்று மழை எதிர்வரும் 23ஆம் திகதி அளவில் ஆரம்பமாகும். இந்த ஆண்டின் வடகீழ் பருவக்காற்றின் உடைவு தாழமுக்கத்தோடு ஆரம்பமாகும். இதனால் இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

எதிர்வரும் நவம்பர் நடுப்பகுதியில் இருந்து டிசெம்பர் நடுப்பகுதி வரை 5 தாழமுக்க நிகழ்வுகள் வங்காள விரிகுடாவில் தோன்றும் வாய்ப்புள்ளது. இதில் இரண்டு தாழமுக்கங்கள் புயலாக மாற்றமடையும் வாய்ப்புள்ளது. இதனால் நவம்பர் 20ஆம் திகதி முதல் டிசெம்பர் 15ஆம் திகதி வரை செறிவான மழை வீழ்ச்சி கிடைக்கும் வாய்ப்புள்ளது.

ஆகவே இந்த ஆண்டின் காலபோக நெற் செய்கையின் சேற்று விதைப்பை மேற்கொள்ளும் விவசாயிகள் அதற்கேற்ற வகையில் திட்டமிட்டு மேற்கொள்வது செறிவான கனமழை மூலம் நெற்பயிர்கள் பாதிப்படைவதைத் தவிர்க்கும். விவசாயிகள் இது தொடர்பாக நெற்செய்கையோடு தொடர்புடைய அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது சிறந்தது என்று தெரிவித்துள்ளார். (ஐ)

### திங்கட்கிழமை...

தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பில், நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தின் சதுரவன் மங்ஷநாயக்க தெரிவிக்கையில்,

“இலங்கை மின்சார சபையாக இருந்த எமது நிறுவனம் பல நிறுவனங்களாக மறுசீரமைக்கப்படவுள்ளது. எங்களுக்கு கடிதம் ஒன்று கிடைத்துள்ளது. அது, ஆங்கிலத்தில் இருக்கிறது. அதில் எமது பெயர், எண் குறிப்பிடப்பட்டு, நீங்கள் இந்த நிறுவனத்துக்கு இணைக்கப்படுகிறீர்கள் என்று மாத்திரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

“யாராவது ஒரு நபர் நிறுவனம் ஒன்றுக்கு இணைக்கப்படும்போது, தனது அடிப்படைச் சம்பளம், தனது பதவி நிலை, தொழில் தன்மை, பதவி உயர்வுகள் போன்ற விடயங்களை கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். அதுதொடர்பான எந்த ஆவணமும் இதுவரை எங்களுக்கு கிடைக்கவில்லை. எமக்கு தற்போது வழங்கப்பட்டிருக்கும் கடிதம் நீக்குப்போகின்ற வகையிலான ஒன்றாகும்.

“மின்சார சபை மாதாந்தம் 4 முதல் 5 கோடி ரூபாய் வரை வருமானமீட்டுகிறது. இவ்வாறான நிறுவனத்தை மறுசீரமைப்பு செய்யும்போது அதன் அமைப்பு தொடர்பில் தீவிரமாக கலந்துரையாடி இருக்க வேண்டும். இவ்வாறான நிறுவனங்களை அவசரமாக மறுசீரமைப்பு செய்யக்கூடாது என்றே நாங்கள் தெரிவித்து வந்தோம். இது தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை.

“நாம் 24 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மாதம் 4ஆம் திகதி முதல் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம். எமது தொழிற்சங்க போராட்டம் தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்தாது, செயல்பட்டு வந்தால் வரும் திங்கட்கிழமை முதல் தொழிற்சங்க போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவோம்” - என்றார். (ஐ)

### யாழ்.தேவி...

பிற்பகல் 2.15 மணிக்கு காங்கேசன்துறையை வந்தடையும்.

இதேநேரம், காங்கேசன்துறையிலிருந்து யாழ்தேவி ரயில் 30 நிமிடங்கள் தாமதமாக முற்பகல் 11.00 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்படும். (ஐ)

### மனித....

அரியாலை - சித்துப்பாத்தி மனித புதைகுழியின் அடுத்தகட்ட அகழ்வுக்கு கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் அலுவலக மட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன. உரிய நடைமுறைகளை விரைவில் பூரணப்படுத்தி, தேவையான நிதியை வழங்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமைய, மனித புதைகுழி அகழ்வுக்கான நிதி விடயத்தில் எவ்வித சிக்கல்களும் இல்லை என அமைச்சர் ஹர்சன சுட்டிக்காட்டினார்.

அரியாலை மற்றும் குருக்கள்மடம் மனிதப் புதைகுழி அகழ்வுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குரிய பாதீடுகள் ஏற்கனவே தயார் செய்யப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் துறைசார் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු

# வன்னி மாவட்டத்தில் 101,762 ஏக்கர் நிலங்களை விடுவிக்க நடவடிக்கை

**சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக்க**



**வவுனியா, ஒக். 03**

**வன்னி மாவட்டத்தில் 101,762 ஏக்கர் நிலங்களை மக்களுக்காக விடுவிக்க இருக்கின்றோம் என சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக்க பட்டபெந்தி தெரிவித்தார்.**

வவுனியா மதுரா நகர் பகுதியில் தாவரவியல் பூங்கா மற்றும் வன்னி விளாங்குளம் பகுதியில் எக்கோ பூங்கா என்பவற்றை அமைப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக்க பட்டபெந்தி தலைமையில் தலைமையில் இடம் பெற்றது.

இந்த கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்கள் அரசாங்கம் கடந்த ஜூலை மாதம், வன பாதுகாப்பு இடங்களாக கிட்டத்தட்ட 30 இடங்களை அடையாளம் கண்டு அதனை பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள இருந்தது.

கடந்த கால அரசாங்கங்கள் ஜி.பி.எஸ். தொழில்நுட்பம் மூலமாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் அளவீடுகளை மேற்கொண்டிருந்தன.

இவ்வாறு அளவீடு மேற்கொள்ளும்போது மீள்குடியேறிய மக்களின் வாழ்விடங்கள், விவசாய நிலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், அரச நிலங்கள் என்பனவற்றையும் வன பிரதேசங்களுக்குள் உள்வாங்கும் நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக இங்கே பாரிய ஒரு காணி பிரச்னை காணப்பட்டது. இதன் காரணமாக குறித்த திட்டம் இங்கே நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தது.

நாம் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் இதற்கான உரிய தீர்மானங்களை மேற்கொண்டு வன்னி நிலப்பரப்பில் 101,762 ஏக்கர் நிலங்களை மக்களுக்காக விடுவிக்க இருக்கின்றோம்.

அதில் வவுனியா மாவட்டத்தில் 22,804.40 ஏக்கர் நிலமும், மன்னார் மாவட்டத்தில் 178,82.8 ஏக்கர் நிலமும், முல்லைத்தீவு மாவட்டத்திலே 48,532.6 ஏக்கர் நிலங்களும் விடுவிக்கப்பட இருக்கின்றன.

ஆனால் இவ்வாறு நிலங்கள் விடுவிக்கப்பட்டாலும் பிரச்னைகள் மேலும் இருக்கின்றது என்பதை நாங்கள் இனம் கண்டிருக்கின்றோம்.

எனவே அதனையும் தீர்க்கும் முகமாக கடந்த ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ஒரு அமைச்சரவை தீர்மானத்தை எடுத்திருந்தோம்.

அந்த அமைச்சரவை தீர்மானத்தின்படி, வன வள திணைக்களத்தினால் எல்லைப்படுத்தப்பட்டிருக்கின்ற இந்த காணிகளை விடுவிப்பதற்காக அனைத்து திணைக்களங்களும் உள்ளடங்கலாக ஒரு விசேடமான குழுவை நாங்கள் நியமித்திருக்கின்றோம்.

வனவள திணைக்களத்தினால் கையப்படுத்தப்பட்ட காணிகளை நிச்சயமாக மக்களுக்காக விடுவிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்-என்றார். (அ)

## காற்றாலை வேண்டும் என்று மன்னாரில் நேற்று போராட்டம்

மன்னார், ஒக். 03

மண்ணார் மாவட்டத்தில் காற்றாலை வேண்டும் என்று தெரிவித்து இளைஞர்கள் குழுவொன்று நேற்று போராட்டத்தில் ஈடுபட்டது.

மன்னார் மாவட்டத்தில் காற்றாலைச் செயற்திட்டத்துக்கு எதிராக தொடர்ச்சியாக பல்வேறு விதமான போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் கடந்த திங்கட்கிழமை மாவட்டம் முழுவதையும் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு காற்றாலைக்கு எதிராக போராட்டம் ஒன்றை மேற்கொண் டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக மன்னார் மாவட்டத்தைச் சாராத சில இளைஞர்கள் உள்ளடங்கலாக ஒரு குழு ஒன்றிணைந்து மண்ணார் மாவட்டத்தில் காற்றாலை வேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டது.

போராட்டத்தை தொடர்ந்து காற்றாலை தொடர்பில் மகஜர் ஒன்றையும் மாவட்ட செயலகத்தில் கையளித்தனர்.

குறித்த போராட்டக்காரர்களின் நடவடிக்கைகளில் சந்தேகம் ஏற்பட்டதையடுத்து சிலர் அந்த குழுவிடம் கேள்வி எழுப்பியபோது சிலர் தப்பிச் சென்றனர். ஒரு சில இளைஞர்கள் தடுக்கப்பட்டு அவர்களிடம் போராட்டம் தொடர்பில் வினவப்பட்டது.

அதன்போது கூட்டம் ஒன்று என்று கூறி தங்களை மல்லாவியில் இருந்து அழைத்து வந்ததாகவும் பணம்,உணவு மற்றும் ஏனைய செலவுகளை தாங்கள் பார்த்துக் கொள்வதாக தெரிவித்து அழைத்து வந்ததாகவும் அவர்கள் கூறினர். (அ)

## அமெரிக்காவில் நாட்டை காட்டிக்கொடுத்த அநுர!

**சுதந்திர கட்சி விசனம்**

கொழும்பு, ஒக். 03

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அமெரிக்கா சென்று உலக நாடுகளுக்கு மத்தியில் தாய்நாட்டைக் காட்டிக் கொடுத்திருக்கின்றார். நாட்டின் பெருமையைக் கூறி சந்தை வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதை விடுத்து, உள்ளக விவகாரங்களை சர்வதேசத்துக்கு வெளிப்படையாகக் காண்பித்து இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தியிருப்பதாக சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு-டாலி வீதியிலுள்ள சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கடந்த ஆட்சி காலங்களில் எரிபொருட்களுக்கு எதற்காக இவ்வாறு வரி அறவிடப்படுகிறது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட அனைவரும் வகுப்பெடுத்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் இன்று இவர்களால் எரிபொருள் விலையில் என்ன நிவாரணம் வழங்கப்படுகிறது? ஜனாதிபதி அநுர ஜப்பான் சென்று அங்குள்ள இலங்கை பிரஜைகள் மத்தியில் உரையாற்றியபோது, இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வரி அதிகரிக்கப்பட மாட்டாது எனக் கூறினார். அதற்கு அவர்கள் கரகோஷமெழுப்பினர்.

அவர்கள் ஜப்பான் பொருளாதாரத்துடன் செழிப்பாகவே வாழ்கின்றனர். ஆனால் அதனால் இலங்கை வாழ் மக்களுக்கு என்ன பயன்? ஆட்சிக்கு வர முன்னர் ஏற்கனவே அறவிடப்பட்ட வரிகளை குறைப்பதாகக் கூறினர். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? மக்களுக்கு இது சிறந்த பாடமாகும். இது இவ்வாறு நடக்கும் என்பதை நாம் ஆரம்பத்திலேயே கூறினோம். மக்கள் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்.

உணவுப் பொருட்கள், மருந்துகள், கல்வி சார் உபகரணங்கள் உள்ளிட்டவற்றுக்கான வரி முற்றாக நீக்கப்படும் எனக் கூறினர். ஆனால் குறைந்தபட்சம் அவற்றுக்கான வரிகளைக் குறைப்பதற்கு கூட இந்த அரசாங்கம் இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை.

அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதிக்கு, உலகிலுள்ள சகல நாடுகளுக்கு மத்தியில் இலங்கையில் சந்தை வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்கு சிறந்த சந்தர்ப்பம் காணப்பட்டது. ஆனால் அவர் அதற்கு பதிலாக நாட்டின் உள்ளக பிரச்னைகளை அங்கு கூறி, தாய்நாட்டைக் காட்டிக் கொடுத்துள்ளனர்.

இலங்கையில் முதலீடுகள் தொடர்பில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே ஜனாதிபதி அநுர அமெரிக்கா சென்று நாட்டின் மீது சகல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துவிட்டு வந்திருக்கின்றார். அநுரகுமார திஸாநாயக்க இன்றும் தனக்கான 3 வீதத்தைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே கவனமாகவுள்ளார். 65 இலட்சம் வாக்காளர்களை அவர் மறந்துவிட்டார்-என்றார். (அ)

## தனியார் பேருந்துகளில் பயணச்சீட்டு கட்டாயம்!

கொழும்பு, ஒக். 03

தனியார் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் கட்டாயமாக பயணச்சீட்டு பெறும் சட்டம் ஒரிரு நாட்களில் கடுமையாக்கப்படும் என மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றி வளைப்புகள் நேற்று முன் தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த நடைமுறையானது சட்டமாத்திரமல்ல.

அனைவரினதும் பொறுப்பும் கூட. ஒரு சிறப்புத் திட்டத்துடன் நாங்கள் இதை செய்கிறோம்.

பேரூந்து நடத்துனர் கட்டாயமாக பயணச்சீட்டை வழங்க வேண்டும். முதலாவது நிறுத்தத்துக்கு முன்பாக நடத்துநர் பயணச்சீட்டை வழங்கியிருக்க வேண்டும். அதேபோல, பயணியும் பயணச்சீட்டை வாங்கி வைத்திருக்கவேண்டும். இது இருவருக்குமான சட்டமாகும்.

எங்கள் முயற்சி, எல்லோரையும் அடையாளம் காணும் வகையில் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் சட்டபூர்வமான முறையை உருவாக்குவதே.

அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகின்றோம் என மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை கூறியுள்ளது. (அ)

## இலங்கை உள்ளிட்ட நாடுகளுடன் வர்த்தகத்தில் இனி இந்திய ரூபாய்!

கொழும்பு, ஒக். 03

இலங்கை உள்ளிட்ட பிராந்திய நாடுகளுடனான வர்த்தக பரிவர்த்தனைகளில் இந்திய ரூபாயைப் பயன்படுத்த இந்திய ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது.

இலங்கை, நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளுடனான வர்த்தக பரிவர்த்தனைகளில் இந்திய ரூபாயைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கூடுதலாக, சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு இந்திய ரூபாயில் கடன்களை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பிராந்திய வர்த்தகத்தில் அமெரிக்க டொலரைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கி அதன் முக்கிய வர்த்தக பங்காளிகளுக்கு அதிகாரபூர்வ மாற்று வீதத்தை அறிமுகப்படுத்தவும் முடிவு செய்துள்ளது. (அ)

## கிளிநொச்சியில் தீயில் எரிந்தது மரத்தளபாட உற்பத்தி நிலையம்

கிளிநொச்சி, ஒக். 03

கிளிநொச்சி - உதயநகர் பகுதியில் உள்ள மரத்தளபாட உற்பத்தி நிலையத்தில் நேற்று முன் தினம் இரவு தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

மரத்தளபாட உற்பத்தி நிலைய உரிமையாளர் நேற்று முன் தினம் மாலை உற்பத்தி நிலையத்தை பூட்டி விட்டு வீடு சென்ற நிலையில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

தீ பரவியதை அவதானித்தவர்கள் உரிமையாளருக்கு அறிவித்த நிலையில், உரிமையாளரால் கரைச்சி பிரதேச சபை தீயணைப்பு பிரிவுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச சபை தீயணைப்பு வாகனம் வருகை தந்தும் பெரும் முயற்சியின் பின்பு மக்களும் சேர்ந்து தீ பரவலை பல மணி நேரத்துக்கு பின்பு கட்டுப்படுத்தியுள்ளனர்.

இதன்போது சில இயந்திரங்கள் மற்றும் தளபாடங்கள் செய்வதற்காக வைத்திருந்த பெறுமதியான மரங்கள் தீயில் எரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## பாடசாலைக்குள் மதுபானம் மூன்று மாணவர்கள் கைது!

கொழும்பு, ஒக். 03

மொனராகலை - ஹூலந்தாவ பகுதியில் உள்ள ஒரு பாடசாலைக்குள் மதுபானம் கொண்டு சென்ற பாடசாலை மாணவர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச சிறுவர்கள் தின கொண்டாட்டத்துக்காக நேற்று முன்தினம் மதுபானம் கொண்டு வந்த மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை வளாகத்தில் மது அருந்திக்கொண்டிருந்தபோது குறித்த மாணவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.